**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 2010**

**-----------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**-------------**

**1.1 அபிப்பிராயம்**

**----------**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**-------------------------------**

**1.2.1. இலங்கை கணக்கீட்டு நியமம்**

**---------------------**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 1,044,812,358 தொகையான நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு அப் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் பிரகாரம் பொது ஒதுக்கத்திற்கு சீராக்கப்பட்ட ரூபா 21,564,581 தொகையான கடந்த வருட செலவினங்கள் தொடர்பான தகவல்கள் ஐந்தொகைக் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட ரூபா 19,181,893 கூட்டுத்தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2011 ஏப்ரல் 30 ஆம் திகதிய முகாமைத்துவ அறிக்கையின் மூலம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் ரூபா 953,560 தொகையான குறைபாடுகள் திருத்தப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2011 மே 13 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பட்டப்பின்படிப்பு பீடத்திற்கான அன்பளிப்பாக பெறப்பட்டிருந்த ரூபா 18,228,333 ஆன மூலதன அன்பளிப்புகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகளில் இருந்தான விடுபடுதல்களும் கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையும்

(i) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட அன்பளிப்புகளில் இருந்து நிர்மாணிக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் வெளிவாரி பரீட்சைப் பிரிவில் காணப்பட்ட ரூபா 1,014,385 ஆன வெளியீட்டு இருப்புக்களின் பெறுமதி விடுபட்ட காரணத்தினால் மிகுதி இருப்புக்கள் அப் பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பரீட்சிக்கப்படாது அப் பெறுமதியினை பொது ஒதுக்கத்தில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

(i) கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் பிரதான களஞ்சியத்தில் பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது

அவதானிக்கப்பட்ட முறையே ரூபா 1,755,173 மற்றும் ரூபா 1,136,297 இருப்பு மிகைகளான ரூபா 2,891,470 தொகை இருப்புச் சீராக்கங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் இவ் வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு கணக்குகள் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 21,584,275 ஆன செலவிடப்படாத மூலதனப் பெறுமதியில் மதிப்பீட்டிற்கு மேலாக செலவிடப்பட்ட ரூபா 11,189,683 தொகை கழிக்கப்பட்டு ஐந்தொகையில் செலவிடப்படாத மூலதன மீதியாக ரூபா 10,394,592 காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் ஐந்தொகையில் தொலை நிகழ்ச்சித்திட்டங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 161,530,617 ஆன மீதியில் செயற்பாட்டு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த 30 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரித்தான ரூபா 4,964,255 தொகையினை பல்கலைக்கழக வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---------------------------------------

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட 09 கணக்குகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 26,497,409 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இதற்கான காரணங்கள் ஆய்வு செய்யப்பட்டு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் பல வருட காலமாக நிலவிவரும் நானாவித கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,002,733 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,153,056 தொகையான ஊழியர் கடன்கள், வாகன, இடர் மற்றும் கணனி கடனாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கடன் மீதி பல வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்டன.

(இ) நிதிக்கூற்றுக்களின் 03 விடயங்களின் கீழ் உள்ள முற்பணக் கணக்குகளில் காணப்படும் ரூபா 5,260,552 தொகையான மீதி நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்ட போதிலும், அம் முற்பணங்களை விரைவாகத் தீர்த்துவைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தில் பல்வேறு சேவைகளை (சிற்றுண்டிச் சாலை, புத்தகக் கடைகள், போட்டோ பிரதி சேவைகள்) நடாத்திவரும் தனியார் நிறுவகங்களிடம் இருந்து 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஒக்டோபர் வரை நீர் மற்றும் மின்சாரப் பயன்பாட்டிற்காகப் பெறவேண்டியிருந்த ரூபா 2,053,649 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 25 ஆண்டுகள் வரி காலஎல்லையை அடுத்து பல்கலைக்கழகத்திற்கு மீள ஒப்படைக்கும் அடிப்படையில் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து மக்கள் வங்கிக்கு 1998 நவம்பர் 02 ஆம் திகதி வழங்கப்பட்ட நிலப்பகுதியில் மக்கள் வங்கியினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக இரு தரப்பு இணக்கப்பாட்டில் பல்கலைக்கழகத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,405,000 தொகையான வரித்தொகையில் இற்றைவரை ரூபா 40,000 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி (2011 சனவரி 17) வரையும் இரு தரப்பும் எழுத்து மூல உடன்படிக்கைக்கு வந்திருக்கவில்லை.

(ஊ) பல்கலைக்கழகத்தின் விடுதி நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரைப் பணியகத்தினால் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட வேலைத்தளக் காரியாலயம் உரிய செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டதை அடுத்தும் (2008 மே) அது அகற்றப்படாததுடன் 2008 சனவரி முதல் 2010

செப்தெம்பர் வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீருக்காக ரூபா 903,739 தொகை பல்கலைக்கழகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

(எ) பல்கலைக்கழக வளாகத்தில் போட்டோ பிரதி சேவைகள் நடாத்தப்படுவது தொடர்பாக 2008 செப்தெம்பர் முதல் 2010 ஆகஸ்ட் வரை ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 79,806 தொகையான நிலுவைத் தொகை அறவிடப்படாது மீண்டும் 2010 செப்தெம்பர் முதல் கேள்வி அவ் ஒப்பந்தக்காரருக்கே வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) தேசிய இளைஞர் சேவைகள் சபையின் காரியாலயத்திற்கு மற்றும் இலங்கை ஜயவர்தனபுர பல்கலைக்கழக கூட்டுறவு புத்தக விற்பனை நிலையத்திற்கு கடன் அடிப்படையில் மாணவர் கைநூல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 848 மாணவர் கைநூல்களுக்காக பெறவேண்டிய ரூபா 203,680 தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2010 யூலை 12 வரையும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

முறையே ரூபா 17,460,684 மற்றும் ரூபா 66,873,123 ஆன பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளுக்காக காலப்பகுப்பாய்வுடன் பட்டோலை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் கோரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் | |
| | I | 29 ஆம் பிரிவின் (ஏ) உப பிரிவு | பல்கலைக்கழகம் ஒன்றின் உச்ச சபையினால் பரிந்துரைக்கப்பட்டு அப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு கௌரவ பட்டத்தையோ அல்லது வேறு கல்விசார் நிபுணத்துவப் பட்டத்தையோ வழங்க வேண்டிய போதிலும் இதற்கு மாறாக சரித்திரம் மற்றும் தொல்பொருளியல் பிரிவின் ஹேம எல்லாவல மன்றத்தின் மூலம் வெளிநாட்டவர் ஒருவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டிருந்தது. |
| | II. | 29 (எ) ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்திலோ ஏதேனும் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவகத்தில் மாணவர்கள் அல்லாது பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகளின் மூலம் சித்தியெய்திய நபர்களுக்கு பட்டம், உயர் திறன் சான்றிதழ் வேறு கல்விசார் திறன் என்பன ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன், வழங்கலும் கையளிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் முகாமைத்துவ கல்வி மற்றும் வணிக விஞ்ஞான பீடம் ஆரம்பித்த வெளிவாரி மாணவர்கள் கலந்து கொள்ளக்கூடிய ஒரு வருட 07 சுய நிதி பாடநெறிகளுக்காக ஆணைக்குழுவின் உடன்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | III | 99 ஆம் பிரிவின் (ஈ) உப பிரிவு | உயர் கல்வி நிறுவகத்திற்கு உரித்தான எந்தவிதமான நிதி மூலங்களிலிருந்தும் பெறப்படும் |

| | | |
|---|---|---|
| | | பணம் பல்கலைக்கழக நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியதுடன் அப் பணத்தை நிர்வகிப்பது சிறாப்பரின் பொறுப்பாகும். எனினும் பல்கலைக்கழக நிதியத்திற்கு கொண்டுவரப்படாது 10 வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அக் கணக்குகளின் மீதி ரூபா மில்லியன் 89 ஆகக் காணப்பட்டது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) | 5 வங்கி நடைமுறைக் கணக்குகளின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்தும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 2,338,314 தொகையான 105 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xix ஆம்அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு | பொருட் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் 25 உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் வாடகை வீடுகளில் 11 இற்காக பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபனவிதிக் கோவை | |
| | I 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | விரிவுரையாளர்களினால் லீவு பெறப்படுகையில் குறித்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டிராததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட லீவுகள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| | II 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 | விரிவுரையாளர்களும் தமது வரவை உறுதிப்படுத்துவதற்காக வரவுப் பதிவேட்டில் |

| | | |
|---|---|---|
| | ஆம் பிரிவு | கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| III | 26 ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | உயர் கல்வி நிறுவகங்களில் சகல பொருட்களும் நிலையான சொத்துக்களும் தொடர்பாக மெய்மையாய்வுச் சபை ஒன்றினால் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,127,236,848 பெறுமதியான நிலையான சொத்துக்கள், ரூபா 3,273,492 தொகையான உப களஞ்சிய இருப்பு மற்றும் நுலகப் புத்தகங்கள் தொடர்பாக அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்ட ரூபா 1,512,454,184 பெறுமதியான பதிவுப் பொருட்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 352 ஆம் இலக்க நிர்வாக சபைத் தீர்மானம் | ஆதனங்கள் மற்றும் மதிப்பீட்டு முகாமைத்துவ கற்கைப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட்டதாக எடுக்கப்பட்ட தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2006 ஒக்டோபர் 09 ஆம் திகதி நடாத்தப்பட்ட 06 ஆவது வீடமைப்பு குழுக் கூட்ட தீர்மானம் | 03 வருட காலத்திற்கு மேலாக வாடகை வீடுகளில் குடியிருக்கும் 06 உத்தியோகத்தர்களை அவ்வீடுகளிலிருந்து வெளியேறுமாறு திகதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2011 யூன் 06 ஆம் திகதி வரையிலும் வீடுகளில் இருந்து வெளியேறியிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------

### 2.1. நிதிசார் மீளாய்வு

-------------

#### 2.1.1. நிதிசார் விளைவுகள்

---------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளின் நிதிசார் விளைவு மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுக்க முன்னர் ரூபா 1,219,962,568 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,075,329,651 ஆகும். மீண்டெழும் செலவிற்காக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,165,713,709 மானியத் தொகை காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 54,248,859 வரை குறைவடைந்திருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 1,058,856,653 தொகையான அரசாங்க மானியம் பெறப்பட்டதன் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 16,472,998 ஆகக் காணப்பட்டது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 37,775,861 தொகையான வீழ்ச்சிக்கு ஒட்டுமொத்த செலவுகள் ரூபா 164,564,622 ஆல் அதிகரித்ததற்கு நேரொத்ததாக பல்கலைக்கழக வருமானம் ரூபா 19,931,704 ஆல் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

#### 2.1.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விடுதி வாடகைக்குப் பெறப்படுதல்

------------------------

(i) 2004/ஈடீ/எச்ஈ/63 ஆம் இலக்க 2004 திசெம்பர் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1,050 படி மாதாந்த விடுதிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் இதற்கு மாறாகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2008

**செப்தெம்பர் முதல் 2011 ஆகஸ்ட் வரை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 6,079,414 ஆகக் காணப்பட்டது.**

(ii) **2010/2011 ஆம் ஆண்டிற்காக அவ் விடுதியை வாடகைக்குப் பெறுவது தொடர்பாக தொழிநுட்பக் குழுவினால் சுற்றாடல் தாக்கங்களில் இருந்து விடுபடுவதற்காக விடுதி சுற்றாடலில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்காக செலுத்தப்படுவதற்கு நியமிக்கப்பட்ட வாடகையில் ரூபா 1,000,000 தொகை பிடித்து வைத்துக்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2011 பெப்ரவரி வரை அப் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாது மொத்த வாடகைத் தொகையும் விடுதி கட்டுப்பாட்டாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.**

(iii) **பல்கலைக்கழகத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட விடுதி குடியிருப்பதற்கு ஏற்றது என்பதற்காக உள்ளூராட்சி அதிகாரசபைகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

(iv) **மாணவர் விடுதியாக தனியார் வீடுகளை வாடகைக்கு எடுக்கப்படுகையிலும் வாடகைத்தொகையை அதிகரிக்கையிலும் நிதிப் பிரமாணம் 835(2)(இ) இன் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து அறிக்கை பெற்றிருக்கவில்லை. இவ்வாறே ஆதன மற்றும் மதிப்பீட்டு முகாமைத்துவ கற்கைப் பிரிவினால் மதிப்பிடப்பட்ட வாடகைக்கும் மேலாக வாடகை செலுத்தப்பட்டிருந்தமையால் 2001 முதல் 2010 வரை ரூபா 627,500 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.**

(v) **நிதிப் பிரமாணம் 835(3) இன் பிரகாரம் வாடகை காலஎல்லைக்காக எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாத 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையும் 08 மாத கால தாமதத்தை அடுத்து கைச்சாத்திடப்பட்டிருந்தது.**

(ஆ) **வெளிவாரிப் பரீட்சைகளுக்கான பதிவுக் கட்டண அறவீடு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்**

**வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் பதிவுக் கட்டண அறவீடு மற்றும் உரிய ஏனைய கட்டணக் கொடுப்பனவின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 861 ஆம் இலக்க 2005 ஏப்ரல் 26 ஆம் திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு மாறாக புதிய கட்டணங்களை அறவிடுதல் மற்றும் நிலவும் கட்டணத்தை 25சூ முதல் 860சூ வரையான வீச்சில் அதிகரிக்கும் கட்டண திருத்தம் கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.**

**மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.**

(i) **கட்டுப்பாட்டுச் சபையினால் 364:09(1) ஆம் இலக்க தீர்மானம் எடுக்கப்படுகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு மாறாகச் செயற்படுவதற்காக தீர்மானம் எடுக்கப்படுவது சபையின் அதிகாரத்திற்கு மேலான செயற்பாடு என்பது அவதானிக்கப்பட்டது.**

(ii) **கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் முறையான செயற்பாடின்றி நிர்வாகசபை அங்கீகரித்த 242/22 ஆம் இலக்க நிதிக்குழு பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் 2009 ஒக்டோபர் முதல் 2010 மே வரை ரூபா 6,847,815 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.**

(iii) **நிர்வாக சபை எடுக்கும் தீர்மானம் பல்கலைக்கழ மானியங்களை ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---------------

### 2.2.1 செயலாற்றல்

----------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் 4 பீடங்களில் 10,465 மாணவர்கள் கல்விகற்று வந்ததுடன், இதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,429,973,872 தொகை செலவு செய்ததன் காரணமாக ஒரு மாணவனுக்காக செலவினம் ரூபா 136,643 ஆகும்.

(ஆ) பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சபையில் 464 விரிவுரையாளர்கள் அடங்கியிருந்த போதிலும் இவர்களில் 61 பேர் மீளாய்வாண்டின் போது சபாடிகல் விடுமுறை அல்லது ஏனைய விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

### 2.2.2 தாமதமான செயற்திட்டங்கள்

---------------------

ரூபா 70 மில்லியன் தொகையான பல்கலைக்கழகத்தின் கழிவு நீர் அகற்றும் செயற்திட்டத்திற்காக 2003 ஆகஸ்ட் 06 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2011 யூன் 30 இல் உள்ளவாறும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முகாமைத்துத் திறமையீனங்கள்

-----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தினால் 842 ஆம் இலக்க 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தனியார் கம்பனி ஒன்றின் மூலம் தயாரிக்கப்படுவதற்கு 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 1,147,412 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிராமையால்

பல்கலைக்கழகத் தேவைப்பாட்டிற்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாதிருந்தது.

(ஆ) 08 ஆம் இலக்க 2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு முகவரகத்தின் சுற்றறிக்கையின் 4.3.1 மற்றும் 4.3.2 பிரிவுகளின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் 2010 மார்ச் 31 ஆம் திகதி விளையாட்டரங்கு புனரமைப்பிற்காக 20 நாட்களுக்காக 04 இயந்திரங்கள் (80 இயந்திர நாட்கள்) பெற்றுக்கொள்வதற்கும் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாது விலைகள் கோரப்பட்டிருந்தன. 249 இயந்திர மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தி 2011 சனவரி 06 இல் உள்ளவாறு ரூபா 4,218,961 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2010 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் பல்கலைக்கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட கூடைப்பந்து, டெனிஸ் மற்றும் கரப்பந்து போன்ற போட்டிகள் நடாத்தப்படும் நோக்கில் இவ் விளையாட்டரங்கின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முறையான திட்டத்தின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததன் காரணமாக இந் நோக்கங்களை அடைய முடியாதிருந்தது.

(இ) வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் மாணவர் கைநூல் விற்பனை வருமானம்

(i) மாணவர் கைநூல் கையேற்பு மற்றும் வழங்கப்படுவதற்காக நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் பேணப்பட்ட பதிவேடும் பூர்த்தியாக்கப்படாத நிலையில் காணப்பட்டது.

(ii) 2010 ஆம் ஆண்டின் வெளிவாரி பட்ட பாடநெறிகளுக்காக (வியாபார நிர்வாகப் பட்ட பாடநெறி தவிர்ந்த) 12,000 மாணவர் கைநூல் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் மாணவர் பதிவுகள் சராசரியாக 6,000 – 7,000 இற்கு இடையில் காணப்பட்டது. தேவைப்பாட்டின் பிரகாரம் அச்சிடப்படாமையால்

**ரூபா 509,737 பெறுமதியான 6023 நூல்கள் எஞ்சிக் காணப்பட்டதுடன் மீள பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இந்நூல்களுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற செலவினமாகியிருந்தது.**

### 2.2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) **ஒரு தவணையில் ஒரு பாடத்திற்காக ஒரு கிழமைக்கு 03 மணித்தியாலங்களின் படி 15 கிழமைகளில் 45 விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் பாலி மற்றும் பௌத்த கல்விப் பிரிவினால் 2010 பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் 2010 யூன் 11 வரையான இரண்டாம் அரை ஆண்டின் போது 26 பாடங்களுக்காக மாணவர் வருகை மற்றும் விரிவுரை நடாத்தப்படும் குறிப்புகள் பரீட்சிக்கப்படுகையில் ஒரு பாடத்திலேனும் குறித்த விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு பாடத்திற்காகவும் விரிவுரைகள் நடாத்தப்பட்டிராத மணித்தியாலங்கள் 7 ½ முதல் 43 ½ வரை நிலவியதாக அவதானிக்கப்பட்டது.**

(ஆ) **கலைப் பீடத்தின் மொழி மற்றும் கலாச்சார கல்விப் பிரிவின் வெளிவாரி விரிவுரையாளர்களின் வரவுப் பதிவேட்டின் மணித்தியாலங்களும் கொடுப்பனவுப் பதிவேடுகளின் மணித்தியாலங்களும் இணங்கியிராததுடன் கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மாணவர்களின் வரவுப் பதிவேடோ அல்லது வேறு எழுத்து மூலச் சான்றோ கல்விப் பிரிவில் இருக்கவில்லை.**

(இ) **2008/2009 கலைப்பீட கல்வி நாட்குறிகாட்டியின் பிரகாரம் முதலாம் அரை ஆண்டிற்காக குறித்த வகையில் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் பெறுபேறுகள் வெளியானமை குறித்த தினத்தில் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இது 44 நாட்கள் முதல் 120 நாட்கள் வரையான தாமதத்திருந்தது.**

(ஈ) பல்கலைக்கழகத்தின் ஆங்கிலக் கல்விப் பிரிவிற்காக கல்வி தவணை திட்டம் ஒன்று இல்லாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணித் திட்டத்தின் பிரகாரம் 05 விரிவுரையாளர்களும் 22 ஆங்கில விரிவுரையாளர்களுமாக 27 பதவியணியினர் இருக்க வேண்டிய போதிலும் 04 விரிவுரையாளர்களும் 03 ஆங்கில விரிவுரையாளர்களுமாக 07 பேருடனான ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கற்பித்தல் பிரிவொன்று இருந்த போதிலும், முகாமைத்துவ கல்வி மற்றும் வணிக விஞ்ஞான பீடத்தின் மூலம் அப் பீட மாணவர்களின் ஆங்கிலக் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக வியாபார தொடர்பாடல் பாடத்திற்கு இரு விரிவுரையாளர்களும் அறிவுறுத்துனர் ஒருவருடன் அடங்கிய வேறான பதவியணி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்கான அங்கீகாரமும் அதிகாரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டின் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மிகையாக புத்தகங்கள் பருவகால சஞ்சிகைகள் ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றிற்காக ரூபா 11,286,059 தொகையான மேலதிகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) சில்லறைக் காசு

(உ) பராமரிப்புப் பகுதிக்காக கிரய முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல்

(ஊ) விடுதி நிர்வாகம்